**DEPOSITION OF WITNESS**

**UNDER CODE OF CRIMINAL PROCEDURE**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DHARMAPURI.**

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **CC. No: 569/2025** |
| **Ranking of witness** | **:** | **PW11** |
| **Name** | **:** | **கண்ணன்** |
| **Father's Name** | **:** | **த/பெ ஐய்யாசாமி** |
| **Age** | **:** | **50** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Religion** | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 21-05-2026.**

**எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜரானார்.**

**முதல் விசாரணை :**

நான் தற்போது தருமபுரி மாவட்ட தனிப்பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.06.2025ஆம் தேதி மதிகோன்பாளையம் காவல் வட்ட ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது, அதியமான்கோட்டை காவல் நிலையத்திற்கு நான் பொறுப்பு ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். அன்றைய தேதி காலை 11.45 மணிக்கு, அதியமான்கோட்டை சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.உலகநாதன் என்பவர் எனது பார்வைக்கு வைத்திருந்த அதியமான்கோட்டை காவல் நிலைய கு.எண்.187/2025 u/s.281, 106(1) of BNS Act வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, வழக்கின் சம்பவ இடத்திற்கு பகல் 12.15 மணிக்கு சென்று, சாட்சிகள் நேரு மற்றும் ரங்கநாதன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னிட்டு, சாட்சிகள் ஐயம்மாள், பச்சியப்பன், பசுபதி, ராஜாமணி, ராஜேந்திரன் ஆகியோர்களை விசாரணை செய்தேன். இவ்வழக்கில் இறந்தபோனவர்கள் இரு நபர்கள் என்பதால், அதியமான்கோட்டை உதவி ஆய்வாளர் ராஜேந்திரன் என்பவரை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று, கார்த்திக் என்பவரின் பிரேதத்தின் மீது நான் பிரேத விசாரணை மேற்கொண்டேன். வெற்றிவேல் என்பவரின் பிரேதத்தின் மீது, காவல் உதவி ஆய்வாளர் திரு.ராஜேந்திரன் என்பவர் பிரேத விசாரணை மேற்கொண்டார். மீண்டும் சாட்சிகளை விசாரணை செய்து, சாட்சி பசுபதி என்பவர் சம்பவத்தை நேரில் பார்த்தது பற்றி சாட்சியம் அளித்திருந்தார். மற்ற சாட்சிகள் கோவிந்தராஜ், பழனியப்பன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 20.06.2025 அன்று வழக்கு சம்பந்தப்பட்ட வாகனம் TN28–BJ–9614 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தை, மோட்டார் வாகன ஆய்வாளரின் பரிசோதனைக்கு உட்படுத்தி, மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றேன். அந்த மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சம்பந்தப்பட்ட எதிரி முகம்மது ஹாரிஸ் என்பவரால், விபத்து ஏற்பட்டது என்பது புலன் விசாரணையில் புலன் ஆனதால், அவரை கைது செய்து தக்க பிணையில் விடுவிக்கப்பட்டார். அதற்கு பின்பு, அதியமான்கோட்டை காவல் ஆய்வாளராக திருமதி.லதா என்பவர் பொறுப்பேற்றுக் கொண்டபடியால், வழக்கின் ஆவணங்கள் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

அ.சா.ஆ.1 புகாரில் வாகனத்தை விபத்து ஏற்படுத்தியதாக கூறப்படும் வாகனத்தின் ஓட்டுநர் பெயர் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரி.

புகார் கொடுத்ததாக கூறப்படும் அ.சா.1 ஐயம்மாள் என்பவர் எழுத, படிக்க தெரியாத நபர் என்றால் சரிதான். கைரேகைதான் வைத்துள்ளார். அ.சா.1ன் புகார் யாரால் எழுதப்பட்டது என்பதை என் விசாரணையில் தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த ஒரு மணி நேரத்திற்குள் சம்பவ இடம் சென்றேன் என்றால் சரி. விபத்தில் சம்பந்தப்பட்டதாக கூறப்படும் இரு வாகனங்களும் சம்பவ இடத்தில் இருந்தது. நான் தயார் செய்துள்ள பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில், சம்பவத்தில் தொடர்புடையதாக கூறப்படும் இரு வாகனங்களையும் குறிப்பிட்டுள்ளேனா என்றால், இல்லை. சம்பவ இடத்தை பார்வையிட்டபோது, சம்பவ இடத்தில் இரத்த கறையோ, வாகனங்களின் டயர் தடமோ ஏதேனும் இருந்ததா என்றால், இருந்தது. அதனை நான் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. விபத்து நடைபெற்றதாக கூறப்படும் இடத்திற்கு மோட்டார் வாகன ஆய்வாளரை உடன் அழைத்துச்சென்று, விபத்து தொடர்புடைய வாகனங்களை ஆய்வு செய்தேனா என்றால், விபத்து நடைபெற்றபோது கூட்டம் அதிகமாக இருந்ததால் அன்றைய தினமே மோட்டார் வாகன ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை. விபத்தில் சம்பந்தப்பட்டதாக கூறப்படும் டிப்பர் லாரியை மட்டுமே நான் மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்விற்கு உட்படுத்தினேன் என்றால் சரி. விபத்தில் தொடர்புடைய மற்றொரு இருசக்கர வாகனத்தை நான் மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்விற்கு உட்படுத்தினேனா என்றால், இருசக்கர வாகனத்தை கைப்பற்றினேன். ஆனால் அன்றைய தினமே மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்விற்காக உட்படுத்தவில்லை. ஒரே தேதியில் விபத்தில் தொடர்புடைய இரு வாகனங்களையும் மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்விற்கு உட்படுத்தாதற்கு காரணம் ஏதேனும் உள்ளதா என்றால், இரு சக்கர வாகன உரிமையாளர் மற்றும் அதுதொடர்பான ஆவணங்கள் கிடைக்கப் பெறாததால், ஒரே நாளில் அந்த வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்விற்கு உட்படுத்த இயலவில்லை. மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்விற்கு உட்படுத்தும் காலம் வரை, விபத்து நடைபெற்ற தேதியில் இருந்து, இரு வாகனங்களும் காவல் நிலைய பொறுப்பில்தான் இருந்தது. இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்ற நபருக்கு இருசக்கர வாகன செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்றால், நான் வழக்கு விசாரணையை சிறிது காலம் மட்டுமே நான் விசாரணை செய்ததால், அதுகுறித்து நான் ஆய்வு செய்யவில்லை. சம்பவ இடத்தில் இருசக்கர வாகனத்தின் ஓட்டுநர் பயன்படுத்திய தலைகவசத்தை நான் கைப்பற்றினேனா என்றால், இல்லை. எனவே, சம்பவத்தின்போது அதன் ஓட்டுநர் தலைக்கவசம் அணிந்திருக்கவில்லை என்றால், அதுகுறித்து

என்னால் சரியாக கூற முடியாது. இந்த விபத்திற்கு முழுக்க, முழுக்க இருசக்கர வாகனத்தை இயக்கிய ஓட்டுநர்தான் காரணம் என்றும், அவர்தான் வாகனத்தை கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி தனக்குத்தானே விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. எதிரி இயக்கி வந்ததாக கூறப்படும் வாகனம் விபத்துடன் தொடர்புடையது அல்ல என்றும், விபத்தில் இறந்த நபருக்கு மோட்டார் வாகன இழப்பீடு பெறவேண்டி எதிரிமீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனவே, வழக்கை நான் சரிவர புலன் விசாரணை செய்யவில்லை என்றும், இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் விபத்து தொடர்பாக எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல, தவறு.

<u>மறுவிசாரணை</u> : இல்லை

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்பு சாட்சி கையொப்பம் செய்தார்.**

MOHAMED RIZWANULLAH SHERIFF

Digitally signed by MOHAMED RIZWANULLAH SHERIFF
Date: 2026.05.21 15:25:57 +0530

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிபதி,**

**சாட்சியின் கையொப்பம்.**

**தருமபுரி.**